
**SKY WINGS LTD**
TRAVEL AGENTS
WORLWIDE
24 hour
Ticketing
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE

# வடலி
FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை November 2007 வடலி 7 ஓலை 78

SS ESTATE AGENT
Sales - Lettings
Mortgages - Business Loans
Tel: 020 8471 7779
Fax: 0871 522 7277
www.ssestate.co.uk

# கட்டாயமாக தமிழரை திருப்பி அனுப்புதல் நிறுத்தப்பட்டுள்ளது

தஞ்சம் கோரல் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்ட பல இலங்கைத் தமிழரை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பி உள்ளன. இது சம்மந்தமாகப் பல முறையீடுகள் ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்திற்கு செய்யப்பட்டுள்ளன. இந்த முறையீடுகள் விசாரணையில் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை தமிழர் எவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்று பிரித்தானிய அரசுக்கு ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் அறிவித் துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற சூழலைக் கவனத்திற் கொண்டு தடை உத்தரவு கேட்கும் தமிழர் விண்ணப்பங்கள் 39வது சட்டப் பிரிவின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெளிவான விளக்கம் கொடுத் துள்ளது. 39வது பிரிவு என்பது தான் விசாரணை செய்யும் ஒருவருக்கு எதிராக எந்த ஐரோப்பிய நாடென்றாலும் ஒரு முடிவு எடுத்தால் அதை தன் விசாரணை முடியும் வரை தடுத்து வைக்க ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரமாகும்.

இதனால் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு எல்லா சட்ட வழிமுறைகளும் இழந்த ஒரு இலங்கைத் தமிழரை உள்நாட்டு அலுவலகம் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அப்படிப் பட்டவரால் ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்திற்கு, மனுச் செய்யும் உரிமை உண்டு. அவர் நாடு கடத்தலை அப்பிரச்சனை சம்பந்தமாக தான் இறுதி அறிவுறுத்தல் வழங்கும்வரை தடுக்கும் அதிகாரம் அந்த நீதி மன்றத்திற்கு உண்டு.

எவராவது சிறையில் இருக்கும் போதே உள்நாட்டு அலுவலகத்தால் திருப்பி அனுப்பப்பட இருந்தால் மேலதிக தகவல்களை www.ncadc.org.uk என்ற இணையத்தளத்தில் சென்று பார்வையிடலாம்.

# பெற்றோர்களின் பிரச்சினை பிள்ளைகளுக்கு வேதனையாக அமைகிறது!

பிரச்சினைகள் இல்லாத குடும்பத்தை பார்க்க முடியாது. எல்லா குடும்பங்களிலுமே அவரவர் சக்திக்கேற்ற விதத்தில் பிரச்சினைகள் இருக்கவே செய்யும். ஆனால் இந்தப் பிரச்சினைகளின் அளவு தாண்டும் போது தான் அது விவாகரத்து வரை போய் விடுகிறது.

விவாகரத்தால் தம்பதிகளுக்கு எவ்வளவு பாதிப்பு என்பதை சரியாக அளவிட முடியாது. ஆனால் அவர்கள் குழந்தை பெற்ற தம்பதிகளாக இருந்தால் நிச்சயம் அவர்களின் பிள்ளைகளுக்கான பாதிப்பு அவர்களை விடவும் அதிகம். பெற்றோரின் அரவணைப்பில் வளர வேண்டிய அந்த இளந்தளிர்கள் பெற்றோரின் அன்பை இழக்க நேர்வதோடு, தங்களுக்குள்ளாக ஒரு வித பாதிப்பையும் உணரத் தலைப்படுகின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குழந்தையாக இருக்கும் போது விவாகரத்து செய்து கொண்டால் அந்தக் குழந்தைகள் தாயிடமும் தந்தையிடமும் மாறி மாறி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. தாய் வீட்டாருடன் இருக்கும்போது அங்குள்ள நடைமுறையும் தந்தை வீட்டாரோடு இருக்க நேரும்போது அங்கே கிடைக்கும் அனுபவமும் அவர்களை முற்றிலும் வேறு வேறாய் உணர வைக்கிறது. தவிரவும் இரண்டு வீடுகளிலுமே குழந்தைகளை சரிவர அரவணைத்துக் கொள்ள ஆட்கள் இல்லாத அந்த நேர இறுக்கமான சூழலும் குழந்தைகளை அதிகபட்ச மன நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன. இதனால் அந்தக்குழந்தைகள் தங்களுக்குள் ஒரு வேதனை நிலையையும் பிடிவாதத் தன்மை யையும் ஏற்படுத்திக் கொள்கின்றன.

பெற்றோரின் அன்பு சரிவர கிடைக்காத இந்த மாதிரி குழந்தைகள் பிடிவாத குணம் கொண்டவர்களாகவும் எடுத்தெறிந்து பேசும் இயல்பையும் கொண்டவர்களாக வளருகிறார்கள். தம்பதிகளில் அப்பாவோ அம்மாவோ குழந்தை தங்களுடன் தான் இருக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் உத்தரவு

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

**சில வீடுகளில் கணவனும் மனைவியும் எலியும் பூனையுமாக இருப்பார்கள். ஆனால் ஒரே வீட்டில் தான் இருந்து கொண்டிருப்பார்கள். இது மாதிரியான வீடுகளிலும் அவர்கள் பிள்ளைகள் பாதிக்கப்பட்டடே இருப்பார்கள்.**

## பொப்பி மலர்



பிரித்தானியாவில் "நினைவு தினம்" என்று பொதுவாக அழைக்கப்படும் கார்த்திகை மாதம் 11ம் நாள் போராடி வீழ்ந்தவர்களை நினைவு கூரும் நாளாகும்.

இந்நாள் பிரித்தானிய வாரலாற்றில் ஒரு முக்கிய தினமாக நினைவுகூரப்படும் நாளாகும்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
276 High Street North, Eastham , London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்ஷமிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்


WP
Wimbledon Properties
Estate Agents
162 Merton High Street
Wimbledon SW19 1AZ
Looking to
SELL/BUY or RENT/LET
Landlords & Tennants Welcome
Please Call Us
0208-540-4450

Jayam Net Ltd
Satisfaction
Hosting
FREE Domin Transfer
Web & Graphic Design
Guaranteed
Digital Photos & Invitation Cards
Call on :
WWW.JAYAMNET.COM 0793 2005 855
HAPPY DIWALI
IT SOLUTION


IT Seekers
Bringing IT to your Door Step
கணனி சம்பந்தமான சகல ஆலோசனைகள் மற்றும் திருத்த வேலைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நிறைவாகச் செய்து தரப்படும்.

For all your IT need call
Praba 07985218798

Mortgagelink
The National Mortgage Network
Mob - 07930 626 585
Tel - 020 8946 5566
Nearest Underground :Tooting Broadway - Northern Line
☆ எந்தவிதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% DEPOSIT + STAMPDUTY £2000-00 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

For News /Articles/ Adverts: 020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள் தொகுப்பு - சி.மாசிலாமணி

# பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர் இடம் மாறுகிறார்கள்

நல்ல பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் அப்படியான பாடசாலைகளின் வரையறைக்கு உட்பட்ட பகுதிக்குள் தங்கள் வதிவிடத்தை மாற்றுகிறார்கள். இப்படி இடம்மாறுபவர்கள் நீண்ட காலத்திற்கு அங்கு இருப்பதை அவதானிக்கும்போது பாடசாலைகளிடையில் தரத்தில் பாரிய வித்தியாசம் இருப்பது புரிகின்றது. இந்தச் சூழல் அவதானிக்கப் படுவதால் மேலும் பல பாடசாலைகளின் தரம் உயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. பாடசாலை அனுமதிச் சோதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அனுமதிக்க தேவைப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகை கூடிக்கொன்டே போகின்றது.

# கடவுச்சீட்டு பணியகத்துடன் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம் இணைகிறது

2008ம் ஆண்டு நான்காம் மாதத்திலிருந்து பிறப்பு, திருமணம், இறப்பு ஆகியவற்றின் பதிவைக் கையாளும் தேசிய புள்ளி விபர அலுவலகம் ஐபிஎஸ் என்னும் ஆள் அடையாத்துக்கும் கடவுச்சீட்டுக்குமான பிரிவுடன் இணையப்போகின்றது. இப்போது பதிவுகள் வேறு இலாகாவாக இருந்தாலும் கடவுச் சீட்டு மோசடி போன்றவற்றை முறியடிப்பதற்கு ஏதுவாக கடவுச்சீட்டு சேவையுடன் தகவற் பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. அடுத்த ஆண்டில் இவை இரண்டும் ஒன்றிணைவதால் பொது மக்களுக்கு அனுகூலம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சட்ட விரோதமாக வேலை செய்த முப்பதிற்க்கும் மேற்பட்டோர் கைது

மத்திய இலண்டனில் சென்ற மாதம் 12ம் திகதி ஐந்து உணவுச் சாலைகள் சுற்றி வளைக்கப் பட்டு 30க்கு மேற்பட்ட சட்ட விரோதப் பணியாளர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். கைதானவர்களில் அநேகர் சீன நாட்டையும் மலேசிய நாட்டையும் சேர்ந்தவர்கள். அனைவரும் நாடு கடத்தப்பட உள்ளார்கள். சென்ற மாத இறுதியில் பாராளுமன்றத்திற்கு சட்ட விரோத வேலை சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட மசோதா சட்டமாகும் பட்சத்தில், சட்ட விதிகளுக்கு மாறாக வேலை வழங்குபவர்கள் பாரிய தொகையை தண்டமாகச் செலுத்த வேண்டி வருவதோடு சிறை செல்ல வேண்டியும் ஏற்படலாம்.

# கடவுச்சீட்டும் அடையாள அட்டையும்

ஒரு பிரித்தானியக் குடிமகன் ஏன் அடையாள அட்டைக்கும் கடவுச் சீட்டுக்கும் என ஏன் இரண்டு கட்டணம் செலுத்தவேண்டும் என்ற சந்தேகம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் எழுந்தது. பொது நிறுவனங் களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் உங்கள் அடையாளத்தை நிரூபிக்க அடையாள அட்டை தேவை என்றும் சர்வதேசச் சேவைகளுக்கு கடவுச் சீட்டு தேவை என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது.

2006ல் நடைமுறைக்கு வந்த உயிர்த் தரவுகள் அடங்கிய எலக்ரோனிக் தகடுகள் அடங்கிய கடவுச் சீட்டுக்கள் 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியானாலும் அதில் அடக்கப்படும் எலக்ரோனித் தகடு ஆக இரு ஆண்டு களுக்குத்தான் செயற் திறனுடன் இருக்கும். இக்குறைகளை நிவர்த்தி செய்ய இந்த விடயம் சம்பந்தமாக ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட சபை ஆலோசனையை சமர்ப்பித்துள்ளது. அதாவது இரு ஆண்டுக்கொருமுறை எலக்ரோனிக் தகடு புதுப்பித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஒரே கட்டணத்துடன் அடையாள அட்டையும் கடவுச்சீட்டும் வழங்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

# பல்கலைக் கழகங்களுடன் இணையும் பாடசாலைகள்

ஒவ்வொரு பாடசாலையும் ஏதோ ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும் என்று பல்கலைக் கழகங்களின் செயலாளர் ஜோன் டென்கம் அறிவிக்க உள்ளார்.
குறைந்த வருவாய் உடைய குடும்பங்களிலிருந்தும் பலர் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே இப்படி ஒரு திட்டம் நடைமுறைக்கு வர உள்ளது. வறிய குடும்ப மாணவர்களுக்கும் செல்வந்தக் குடும்ப மாணவர்களுக்கும் இடையில் விகிதாசாரத்தில் பாரிய வேறுபாடு உள்ளது. இதனால் கல்விக்கு உதவிப்பணம் கொடுக்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

# குடிவரவாளர்களால் சுகாதாரம், கல்வி வசதிகள் பாதிப்பு

பிரித்தானியாவுக்கு குடிபெயர்ந்து வருபவர் களால், குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடிபெயர்பவர்களால் சுகாதார வசதி, கல்வி வசதி, குற்றவியல் அணுகுமுறை ஆகியவை பாதிப்புக்கு உள்ளாகுதென்றும் எனவே இது சம்பந்தமாக ஆலோசனை அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குடிபெயர்பவர்களை ஒரு சீரான முறையில் கட்டுப்படுத்தி, சுகாதார வசதி கல்வி வசதி ஆகியவற்றை விரிவாக்கம் செய்ய தேவையான நிதி ஒதுக்கச் சிபார்சு செய்யப் படுகிறது. குடிபெயர்ந்து வருபவர்களால் ஆகக் குறைந்த சம்பளம் எடுக்கும் பிரிவினர் இந்த வெளிநாட்டவர் வரவாற் பாதிக்கப்படப் போவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்

# குடிபெயர்பவர்களுக்கு உரிமை வழங்குவதில் முதல் இடத்தில் சுவீடன்

25 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மத்தியில் மேற்கொண்ட கணக்கு எடுப்பின்படி, தம் நாட்டிற்குள் குடிபெயர்பவர்களுக்கு உரிய முறையில் அவர்களுக்கு உரிமை வழங்குவதில் சுவீடன் நாடுதான் முன்னணியில் நிற்கின்றது. அடுத்து முறையே போத்துக்கல், பெல்ஜியம், ஒல்லாந்து, பின்லாந்து ஆகிய நாடுகள் வருகின்றன. குடியுரிமைச் சட்டம், விசா வழங்கல், பாரபட்சமற்ற சட்டம் போன்றவற்றில் பிரித்தானியாவும் முன்னணியில் நின்றாலும், குடும்ப மீள் இணைவு, அரசியல் உரிமை போன்றவற்றில் மோசமான கொள்கை கடைப்பிடிக்கப் படுவதால் ஒட்டு மொத்தமாகக் கணக்கிடும்போது பிரித்தானிய ஒன்பதாவது இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது.

# கஞ்சா புகைப்பதனால் மனநிலை பாதிப்படைய வாய்ப்புண்டு

கனபிஸ் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கஞ்சா "பி" தர போதைப் பொருளாக இருந்தது. ஆனால் 2004ல் இதைச் "சீ" தரத்திற்கு குறைத்து விட்டார்கள். ஆனால் வைத்திய நிபுணர்கள் அறிக்கைகளின் படி இது ஒரு ஆபத்தான பொருளாகவே கருதப்பட வேண்டி உள்ள து. மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களில் பலர் கஞ்சா புகைப்பவர்களாய் உள்ளனர். மனநிலையை மட்டும் பாதிப்பதோடு நின்றுவிடாது காலப்போக்கில் சுவாசப் பையையும் பாதிக்குமாம். எனது பிள்ளை குடிப்பதில்லை ஆனால் புகைப்பான். அது அவனைப் பாதிக்காது என்று திருப்திப்படும் பெற்றோர்களுக்கு இந்த வைத்திய நிபுணர்களின் அறிக்கை ஒரு விழிப்பூட்டலாக அமையட்டும்.

# அரசு எடுக்கும் நடவடிக்கைகளே உடற் பருமனைக் கட்டுப்படுத்தும்

உடல் பருமனாவது தனிப்பட்ட ஒருவரின் தவறு இல்லை. உடற் பருமனைக் கட்டுப்படுத் அரசு எடுக்கும் நடவடிக்கைகளே வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இத்துறையின் நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். வருவாயின் ஒரு சிறு பகுதி செலவில் போதிய உணவும், வேலையைக் குறைக்கும் வழிவகைகளும், உடலைப் பெரிதாக அசைக்காது செய்யக்கூடிய பணிகளும் உள்ள ஒரு சமுதாயத்தில் உடற் பருமன் தவிர்க்க முடியாத ஒன்று என்பதுதான் அவர்கள் கருத்து. இத்துடன் தாய்மாரும் தாய்ப்பால் ஊட்டுவதைத் தவிர்த்து பிரச்சனையை கூட்டுகிறார்கள். விற்கப்படும் உணவுகளிலும் போசாக்குப் பற்றிய முறையான தகவல் இல்லை. இவை எல்லாம் உரிய நடவடிக்கைக்காக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

# சூழல் மாற்றத்திற்கும் உடற் பருமனுக்கும் தொடர்பு உண்டு!

உடற் பருமனால் பொதுச் சுகாதார சேவைக்கு ஏற்படப்போகும் தாக்கம் பற்றிக் குறிப்பிட்ட சுகாதார சேவைச் செயலாளர் அலன் ஜோன்சன் அவர்கள், அதனால் ஏற்படப் போகும் பாதிப்புக்களுக்கும் சூழல் மாற்றத்திற்கும் சம்பந்தம் உண்டு என்கின்றார். இந்த பிரச்சனையின் எதிர்காலம் பற்றி சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வறிக்கையின்படி 2050ம் ஆண்டளவில் உடற் பருமனைக் கட்டுப்படுத்த கையாளும் சேவையின் செலவையும் அதன் விளைவாய் செலவிடப்படும் வேலை நேரத்தையும் சேர்த்துப் பார்த்தால் ஆண்டுக்கு நாற்பத்து ஐயாயிரம் மில்லியன் பவுண்கள்வரை விரயமாகும் என்று மதிப்பிடப் படுகிறது. இதை ஒரு பொதுப் பிரச்சனையாக எடுத்து எல்லோரும் ஒத்துழைப்பு நல்கி உடல் நலனுக்கு ஏற்ற உணவை உட்கொண்டு போதியளவு உடற் பயிற்சியும் மேற்கொள்ள வேண்டுமென்று அறைகூவலும் விடப்படுகின்றது.

# இலங்கையில் 51.3 வீதமானோருக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை ஐ.நா. தலைமையகம் தெரிவிப்பு

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51.3 வீதமானோருக்கு ஆகக்குறைந்த போதுமான சாப்பாட்டு அளவு உணவுகள்கூட கிடைப்ப தில்லை. உள்நாட்டு போரினால் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் இடம்பெயர்வு காரணமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் வறுமை நிலை அதிகரித்துள்ளது என்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது.
உலக வறுமை ஒழிப்பு தினம் தொடர்பான நிகழ்வு கொழும்பிலுள்ள ஐ. நா. அலுவலகத்தில் நடைபெற்றது.
இந் நிகழ்வில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் இணைப்பாளர் அமீன் அவார்ட், யு. என். டி. பி.யின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட ஐ.நா. முகவர் நிறுவனங்களின் தலைவர் களும், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஐ.நா. தலைமையகம் இலங்கை குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:
மாதாந்தம் ரூபா 2,240இற்கு குறைவான வருமானமுடையோர் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. ஏனைய தொழில் துறைகளைப் பார்க்கிலும் விவசாயத் துறையில் ஈடுபடுவோர் மிகவும் வறிய நிலையில் உள்ளனர். இலங்கையில் எட்டுப் பேரில் இருவர் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளனர். எதிர்வரும் 2015ஆம் ஆண்டிற்குள் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளோரை எட்டுப் பேரில் ஒருவராக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட அழிவுகள், இடம்பெயர்வுகள் மற்றும் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக வறுமை நிலை அதிகரித்துள்ளது.
இலங்கையில் 5 வயதுக்கு குறைவான சிறுவர்களில் 13.5 வீதமானோர் போசணைக் குறைபாட்டை எதிர்நோக்கியுள்ள அதேவேளை, 29.4 வீதமானோர் குறைந்த நிறை உடையவர்களாக உள்ளனர்.
இலங்கையில் தேசிய வறுமை மட்டமானது 23 வீதமாக உள்ளது. இது ஏனைய ஆசிய நாடுகளைவிட முன்னேற்றமான நிலையாகும். இந்தியாவில் 32.1 வீதமாகவும், பாகிஸ்தானில் 32.6 வீதமாகவும், பிலிப்பைன்ஸில் 36.8 வீதமாகவும் வறுமை மட்டம் உள்ளது.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 8

- தி.ச.வரதர்

# பிரசித்தகாரன்

**1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.**

**பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்குமுன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் என்னுவார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்கள் முன்கொண்டு வருகிறோம்**

இன்று ஓடிக்கொண்டிருக்கும் உலகத்துக்கு, மாட்டு வண்டி தோதாக இல்லைத்தான். ஆனால் அன்றைய உலகம் இப்படியெல்லாம் "ஆசைப்படாத" உலகம். அதற்கு மாட்டு வண்டி மிகத் தோதான வாகனம். எரிபொருள் செலவு எதுவுமில்லை. மாட்டுக்கான தீவனம் மட்டுந்தான் செலவு. அன்றைய கிராமத்திலே அது அவ்வளவு பெரிய வி'யமல்ல. வண்டிக்கான பராமரிப்புச் செலவு, "இல்லை" என்று சொல்லக்கூடிய அளவுக்கு எப்போதாவதுதான் வரும். ஊர் தச்சுவேலை செய்கிறவாகளும், கொல்ல வேலை செய்கிறவர்களும் அதைச் சொற்ப செலவில் செப்பம் செய்து விடுவார்கள்.
இன்று "போக்குவரத்து" என்பது பெரிய பிரச்சினையாகவும், பெருஞ்செலவை உண்டாக்குவதாகவும் வளர்ந்து நிற்கின்றது! "கட்டைவண்டி"க் காலத்தின் அமைதியும் நிம்மதியும் இனி ஒரு போதும் வராது!

"கமம்" அல்லாத வண்டிகளுக்கு ஆண்டு தோறும் எத்தனை ரூபாய் வரிப்பணம் கட்டவேண்டியிருந்ததென்பது தெரியவில்லை.

ஆனால், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட உழைப்பவர்களான ஒவ்வொரு ஆண்மகனும், ஆண்டு தோறும் ஆளுக்கு ஒரு ரூபாய் வரிப்பணம் கட்ட வேண்டியிருந்தது.
அந்த வரி எதற்கு? அவர் உயிரோடு ஊரில் வாழ்வதற்குத்தான். அந்த வரிக்குப் பெயரே "தலைவரி" என்பதுதான்!.

இந்தத் தலைவரியைக் குறித்த தவணைக்குள் கட்டிவிடவேண்டுமென்று அரசு அறிவித்தல் வரும்.

இப்போது அரசு அறிவித்தல்கள் செய்தித் தாள்களில் வரும். வானொலியில் வரும் தொலைகாட்சியிலும் வரும். அந்தக் காலத்தில் இந்த மக்கள் தொடர்புச் சாதனங்கள் எதுவுமே மக்களிடம் செல்வதில்லை. எனினும், அரசு அறிவித்தல்கள் யாவும் கிராமம் கிராமமாக மூலை முடுக்குகளில் வாழ்ந்த மக்களை யெல்லாம் ஒழுங்காகச் சென்றடைந்தன.

எப்படி?

அந்தக்கால அரசு அறிவித்தல்கள் எல்லாம் "பிரசித்தம்" மூலம் வரும்!

அரசாங்க ஏஜெண்டர் மணியகாரனுக்கு அறிவிக்க, மணியகாரன் உடையாருக்கு அறிவிக்க, உடையார் விதானையாருக்கு அறிவிப்பார். அறிவித்தல் கிடைத்த உடனே விதானையார் வழக்கமாக ஒழுங்கு செய்து வைத்திருக்கும் பிரசித்தகாரனை (பறையடிப் பவன்)க் கூப்பிட்டு, ஒரு கடிதத்துண்டில் அறிவித்தலை எழுதிக் கொடுப்பார். அவனுக்கு வாய் மூலம் சொல்லிப் பாடமாக்குவித்து அனுப்புவார்.

ஒழுங்கையில் "டும், டும், டும்" என்று பறை ஒலி கேட்டதும் எல்லாரும் படலைகளைத் திறந்து கொண்டு பிரசித்தகாரனை எதிர்நோக்கி நிற்பார்கள். கிட்ட வந்ததும் "என்ன பிரசித்தம்?" என்று கேட்பார்கள். அவனும் விதானையார் பாடமாக்குவித்து அனுப்பிய அறிவித்தலை "இத்தால் சகலமானவருக்கும் தெரிவிப்பது...." என்று முறையாக எடுத்துச் சொல்வான். மிக அருமையாக யாராவது படித்தவர்கள் சந்தித்தால் அவர்களிடம் விதானையார் எழுதிக் கொடுத்த அறிவித்தலை "நயினார் பார்க்கவும்" என்று சொல்லிக் காட்டுவான்.

இந்தப் "பறையடிக்கிற"வர்களுக்கு ஊரிலுள்ள எல்லா மனிதர்களினதும் குலம் கோத்திரம் எல்லாம் அப்பொழுது தெரிந்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களுக்குரிய பட்டப்பெயர் ஒன்று தெரிந்து வைத்துக் கொண்டு அந்தப் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். எங்கள் வீட்டாரை "செகராச சேகரம்" என்பார்கள். இது என்ன பட்டம் என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு சில காலம் "நாங்கள் செகராச சேகர அரசு பரம்பரையாக்கும்!" என்று பெருமையாக நினைத்ததுண்டு. அது எப்படி இருந்தாலும் இப்போது நான் "பரம்பரை"க்கு மதிப்புக் கொடுப்பதில்லை. பரம்பரைக்கு மதிப்புக் கொடுத்த காலம் மலையேறிவிட்டது!.

இப்போது - இன்றைக்கு, யாரிடம் ஒழுக்கமும், அறிவும், பதவியும், செல்வமும் இருக்கிறதோ அவர்தான் உயர்ந்தவர் இந்த நான்கு பொருள்களும் ஒருவரிடம் வரிசைக்கிரமப்படி மேலோங்கி நிற்பதை அறிந்து அவருடைய மதிப்பையும் கணக்கிட்டுக் கொள்ளலாம். அப்படி உயர்ந்த மதிப்புப் பெறுகிறவர்தான் இன்று உயர்ந்த "சாதி". பெரும்பாலும் இன்று நியாயம் நடப்பதாகவே தோன்றுகிறது.

இது இருக்க,

பறையறைந்து பிரசித்தம் செய்யும் முறை மிகப்பழைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் வழக்கமாயிருந்திருக்கிறது. தமிழ் நூல்கள் பிரசித்தகாரனை "முரசறைவோன்" என்று கூறும்.

அப்பாவின் மாட்டு வண்டி நினைவுக்கு வந்ததும், அதனுடைய அமைப்பு என் கண் முன்னே தெரிகிறது. வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பாகப் பயணம் செய்யக்கூடிய ஒரு சாதாரண வண்டிதான் அது. அலங்காரங்கள் எதுவும் கிடையாது. அப்போது சில பணக்காரர்களிடம் அழகான "வில்" வண்டிகள் இருந்தன. அப்பாவின் வண்டி சாதாரண "ஏபோட்டி" கார் என்றால், அவைகள் நவீன ஜப்பானிய டயோட்டா, டற்சன் மாதிரியிருக்கும்! அந்த வில்வண்டி அமைப்புகளெல்லாம் எமது அடுத்த சந்ததிக்குத் தெரியாமல் போகக்கூடும்.!


வில் வண்டிக் கூடாரங்களெல்லாம் நல்ல பிரம்புகளில் அமைக்கப்பட அதன்மேல் உயர்ந்த பூத்துணிகளும், அதன்மேல் மெழுகுசீலையும் போட்டு அமைக்கப் பட்டிருக்கும். அழகாக வண்ணம் பூசப் பட்டிருக்கும் உள்ளே உட்காரும் இடத்துக்கு வைக்கோல் பரப்பி அதன் மேல் புற்பாய் விரிக்கப்பட்டிருக்கும்.

எங்கள் வண்டிக்கு ஒருமுறை கூடாரம் அமைத்தது எனக்கு நினைவிருக்கிறது. பொன்னாலைக் கிரு'ணன் கோவிலுக்குப் பின்னாலுள்ள தரவையில் அலரிச் செடிகள் நிறைய இருந்தன. நல்ல றோசாப் பூக்களைப் போல், அதே நிறத்தில் கொத்துக் கொத்தாகப் பூத்துச் சொரியும் போது மிக அழகாக இருக்கும். ஆனால் அலரிப் பூக்களுக்கு வாசனை கிடையாது. தற்கொலை செய்ய விரும்புகிறவர்கள் இந்த அலரியின் விதைகளையோ, வேர்களையோ அரைத்துச் சாப்பிட்டு உயிரை விடுவதாகச் சமீபத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அப்பா ஒரு கத்தியுடன் போய், அலரிச் செடிகளில் மிக நீண்ட தடிகளைப் பார்த்து பத்துப் பதினைந்து தடிகளை வெட்டிக் கொண்டு வந்தார். வீட்டு வளவுக்குள் அவைகளை நிலத்தில் போட்டு மேலும் கீழும் உக்கிய பனை ஓலைகளைப் போட்டு எரித்தார். ஓரளவுக்கு எரிந்ததும் தடிகளை வெளியே எடுத்து அவற்றின் தோல்களை உரித்தார். நல்ல துப்புரவாகத் தோல்கள் கழன்று, தடிகள் வெள்ளை வெளேரென்று காணப்பட்டன.

அடுத்த நாள் கூடாரம் கட்டுவதில் தேர்ச்சி பெற்ற ஒரு தொழிலாளி வந்தார். அப்பாவும் அவருமாக, அலரிதடிகளை வண்டியின் இரு பக்கங்களிலும் துவாரங்களில் பொருத்தி மேற்பக்கத்தை அளவான உயரத்தில்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)


**Croydon Tutorial College**

A CENTRE OF ACADEMIC EXCELLENCE
30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN
Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776
Email: admin@croydontutorialcollege.co.uk

**Disappointing Results???**

*Enrol now for GCSE, GCE AS and A2 FULL TIME CLASSES*

**For November/January/June Examinations**

Coaching by experienced tutors
Official Examination Centre for all UK's leading Exam Boards

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Biology
- Maths (Pure, Mechanics, Statistics)
- English
- ICT
- Accounts
- Further mathematics
- Modern Languages
- Business Studies
- Economics

**GCSE REVISION**
English
Mathematics
Physics
Biology
Chemistry
ICT/Computing
French/German/Spanish

- Life In the Uk
- ESOL
- IELTS

Classes already started only a few places left

Evening classes for Years 7, 8, 9, 10, GCSE, AS and A2.

*Press fast forward to reach your potential*

**Visit our website - www.croydontutorialcollege.co.uk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
**020 8694 7412**

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
020 8694 7412

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
**VADALEE**
**PO BOX - 24783**
**LONDON**
**SE13 7YE**


இப் பத்திரிகையை
மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு
ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள்.
ஐரோப்பாவுக்கு 25 யூரோக்கள்

Cheque or Postal order
Payable to: VADALEE

# இளம்புயல்

முத்துமாரி அம்மன் கிரியேசன்ஸ் வழங்கும் அலைகள் மூவிஸின்
இளம்புயல் திரைப்படம் விரைவில் வெளிவர இருக்கிறது. கி.சே.துரை அவர்கள் இயக்கும் இத் திரைப்படத்தை டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்களும் ஐரோப்பா மற்றும் கனடா உட்பட பலநாடுகளில் உள்ள தமிழ் மக்களுடன் பிரபல தமிழக கலைஞர்களும் இணைந்து இப்படத்தை தயாரிக்கிறார்கள்.



இப் படத்தின் கதாநாயகன் வஸந்த். இவர் தற்போது டென்மார்க் ஒல்போ பல்கலைக்கழகத்தில் ஊடகவியல், நவீன சினிமா, இசையமைப்பு ஆகியவற்றிற்கான பட்டப்படிப்பை மேற்கொண்டுவருகிறார். வஸந்த் அவர்களே இளம்புயல் படத்தின் இசையமைப்பாளராகவும் இருக்கிறார்.



கதாநாயகியாக பூர்னிதா நடிக்கிறார். சிறுவயதில் இருந்து திரைப்படங்களில் நடித்து வந்தவர் பூர்னிதா. தமிழ் மலையாள படங்களில் முக்கிய பாத்திரம் ஏற்றும் நடித்துள்ளார். இளம்புயல் திரைப்படத்தில் ஐரோப்பிய பணக்கார குடும்பம் ஒன்றின் வாரீசாக நடிக்கிறார்.

பிரபல நகைச்சுவை நடிகர் கருணாஸ் இளம்புயல் படத்தில் நடித்து ஒரு கலக்கு கலக்கி இருக்கிறாராம். திரைக்கதைக்கு வெளியே நகைச்சுவையை வைக்காது கதையுடனே இணைந்தோடும் நகைச்சுவை யால் கதைக்கு புதிய வலுவும் சீறும் கொடுத்துள்ளார் என அறியப்படுகிறது. அத்தோடு டென்மார்க்கிய பெண்மணி ஒருவருடன் நடித்து கலகலப்பபை ஏற்படுத்தி யுள்ளாராம்.

கனல் பறிக்கும் சண்டைக் காட்சிகள், இனிய பாடல்கள் நகைச்சுவை என பல கோணங் களில் வஸந்த் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளதாக அறியப்படுகிறது. மாணிக்கவிநாயகம், சிறீநிவாஸ், மாலதி, கார்த்திக் போன்ற பிரபல தமிழக பின்னணிப் பாடகர்களும் வஸந்த்-தின் இசையை



பாராட்டியுள்ளனராம். படம் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




உங்கள் அபிமான
வடலியை இப்பொழுது
இணையத்திலும்
பார்வையிடலாம்


www.vadalee.com




## Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham

**ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு.**

**தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394**



## Jayam® Net Ltd

Where Are Your Dreams Come True
Providing Excellent Services At Very Competitive Prices!

FREE Web Hosting
FREE Domin
FREE Transfer
Dynamic Web Design
50% Charity Discount




HAPPY DIWALI

Web & Graphic Desigin
Banners
Book Covers
Logos,Invitation Design
Flyers,DVD &CD Coverd
Commercial Posters & etc...

IT SOLUTION

E-mail : info@jayamnet.com
Website : www.jayamnet.com

NO Hidden Charges ALL Price exc VAT
Registered in England and Wales No.5802596


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பமாகிவரும் பூமி

பூமியின் சராசரி வெப்பநிலை மெல்ல உயர்ந்து வருவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். மனிதனுக்குக் காய்ச்சல் வந்தால் பெரிதாகக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பூமியின் வெப்பநிலை உயர்ந்தால் விபரீத நிலைமைகள் தோன்றி பூமியில் உள்ள உயிரினத்துக்கே ஆபத்து ஏற்படலாம். ஆகவேதான் நிபுணர்கள் கவலைப் படுகிறார்கள்.

நோய்க்கான அறிகுறி தெரிகிறது. ஆனால் நோய்க்கான காரணங்கள் பற்றித்தான் சர்ச்சை நிலவுகிறது. பூமியின் சராசரி வெப்பம் இயற்கையான காரணங்களால் அதிகரித்து வருகிறதா அல்லது மனிதனின் செயல்களால் இவ்விதம் ஏற்பட்டுள்ளதா என்பது பற்றி இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. எனினும் மனிதனின் செயல்களால்தான் இப்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூற இடமுள்ளது.

பூமியின் இப்போதைய சராசரி வெப்பநிலை 15 சென்டிகிரேட் (60 டிகிரி பாரன்□ட்) ஆகும். உலகில் வெவ்வேறு இடங்களில் தினமும் வெப்பநிலையைப் பதிவு செய்து அதன் மூலம் இந்த சராசரி வெப்பநிலை கணக்கிடப்படுகிறது.

ஆனால் இப்போது பூமியின் சராசரி வெப்பநிலை அப்படி ஒன்றும் பெரிதாக அதிகரித்துவிடவில்லை. கடந்த 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட 4 டிகிரி சென்டிகிரேட் அதிகம், அவ்வளவுதான். 1950-ம் ஆண்டு வாக்கில் 13.8 டிகிரி சென்டிகிரேட் என்ற அளவில் இருந்தது. அதைவிட இப்போது 1.2 டிகிரி அதிகம். ஆனால் இந்த சிறு மாற்றங்களும் கடும் விளைவை ஏற்படுத்தக் கூடியவை.

கடந்த 4 லட்சம் ஆண்டு காலத்தில் இருந்து வந்துள்ள வெப்பநிலையை பல்வேறு நவீன முறைகளைப் பின்பற்றி ஆராய்ந்ததில் சராசரி வெப்பநிலையானது நான்கு முறை மட்டுமே 3 முதல் 4 டிகிரி சென்டிகிரேட் அளவுக்கு அதிகரித்தது. வெப்பநிலை சராசரி அளவுக்குக் கீழே சென்றதும் உண்டு. ஐந்து முறை வெப்பநிலையானது சராசரியை விட 8 டிகிரி குறைவாக இருந்ததும் உண்டு. ஆனால் இந்த மாறுபாடுகள் இயற்கையாக நிகழ்ந்தன. ஆகவே தாவரங்கள், உயிரினங்கள் புதிய நிலைமைக்கு மெல்ல மெல்ல மாறிக்கொள்ள நிறைய அவகாசம் இருந்தது. ஆனால்



இப்போது ஏற்பட்டுள்ள அதிகரிப்பு விரைவாக நிகழ்ந்துள்ளது. அத்துடன் இது மனிதனின் செயல்களால் ஏற்பட்டுள்ளதாகும். சராசரி வெப்பநிலை உயர்வானது பருவ நிலைமைகளிலும் மாற்றங்களை உண்டாக்கும்.

பூமியில் சராசரி வெப்பநிலை உயர்வதற்கு காற்று மண்டலத்தில் கரியமில வாயு, மீத்தேன் வாயு போன்ற வாயுக்களின் சேர்மானம் வேகமாக அதிகரித்து வருவதே காரணம். பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றைப் பயன்படுத்தும் பல்வேறான வாகனங்கள், ஆலைகள், நிலக்கரியைப் பயன்படுத்துகிற அனல் மின் நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து ஆண்டுதோறும் மேலும் மேலும் கரியமில வாயு காற்று மண்டலத்தில் சேர்ந்து வருகிறது. இந்த வாயுக்களின் விளைவாகவே பூமியின் சராசரி வெப்பம் அதிகரித்து வருகிறது.

இதன் விளைவாக, குறிப்பாக வட துருவப் பகுதியில் பனிக்கட்டிப் பாளங்கள் அதிக அளவில் உருகத் தொடங்கும். இதனால் கடல் மட்டம் உயரும். கடல் ஓரமாக உள்ள பல நகரங்கள் பாதிக்கப்படும். சில இடங்களில் வறட்சி தோன்றும். வேறு சில இடங்களில் கடும் புயல்கள் வீசும். பயிர் விளைச்சல் பாதிக்கப்படும். பருவநிலை மாற்றத்தால் கோதுமை விளைகிற இடங்கள் நெல் சாகுபடிக்கு ஏற்றவையாகி விடும். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதையெல்லாம் உணர்ந்துதான் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து, காற்று மண்டலத்தில் இவ்வித வாயுக்களின் சேர்மானம் அதிகரிக்கும் வேகத்தை குறைக்க பல நடவடிக்கைத் திட்டங்களை அமல்படுத்த ஒப்புக் கொண்டுள்ளன. குறிப்பாக வசதி படைத்த மேலை நாடுகள் இத் திட்டத்தை முழுமையாக அமல்படுத்தினாலும் சரி, பலன் தெரிய பலப்பல ஆண்டுகள் ஆகும்.

- என்.ராமதுரை

* * *

# வாசகர் கடிதம்

**ஆசிரியருக்கு**

தங்களது ஒக்டோபர் மாத இதழில் முன்பக்கத்தில் "பிரித்தானியாவுக்கு வேலைதேடி வருபவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டும்" என்றும் அதே பக்கத்தில் "தாய்மொழிதான் சிந்தனைக்குரிய அடித்தளம்" என்றும் இரு கட்டுரைகள் போட்டிருந்தீர்கள் அப்படியானால் நாங்கள் என்ன தான் செய்வது சொல்லுங்கோ!

**- பெயர் குறிப்பிடப்படவில்லை, சவுத் கரோ**

**ஆசிரியர்க்கு**

தி.ச.வரதர் அவர்கள் யோக சுவாமிகளைச் சந்தித்தது தொடர்பாக சென்ற மாத வடலியில் படித்தேன். நல்ல விடயத்தை வெளிக் கொணர்ந்துள்ளீர்கள். பத்திரிகையின் தரமும் முன்னெறி வருகிறது. தொண்டுதொடர வாழ்த்துக்கள்.

**- திருமலை பாலா**

**வடலி ஆசிரியர் கவனத்திற்கு,**

சென்ற ஆகஸ்ட் மாதத்தின் வடலியின் பத்தின் அடுக்குகள் கட்டுரையில் இப்பொழுது நடக்கும் சர்வசித்த ஆண்டை கலியுகம் 50109 என்று போட்டிருந்தீர்கள். அது தவறு. கலியுகம் 5109 என்பதே சரி. இரு பெரும் இதிகாசங்களில் ஒன்றான மகா பாரதத்தின் பிற்பகுதியில் கலியுகம் பிறந்ததாகவும், வீமன் காலணியுடன் சென்று தமையன் தருமரிடம் கலியுகம் பிறந்ததை அறிவித்ததாகவும், தருமர் பதிலாக நீ சொல்லாமலே உன் கால் அதற்கு ஆதாரமாக அமைகிறது என்று பதில் கூறியதாகவும் ஒரு கர்ன பரம்பரைக் கதை உள்ளது. இந்தக் கதையை அடிப்படையாக வைத்து கணிப்போமானால் உங்கள் தகவற்படி மகா பாரதம் 5,000 ஆண்டுகளுக்கு முன் நிகழவில்லை 50,000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும். இது அச்சுப் பிழையா அல்லது எழுதியவரின் அறியாமையா?

**- புவி, எட்மன்ரன்**

**ஆசிரியர்க்கு**


சென்ற மாத வடலியில் "மூட்டுவிக்கத்தில் இருந்து விடுபடுவது எப்படி" என்ற சற்று நீட்ட கட்டுரை மிகவும் பயனுள்ள கட்டுரையாகும். மிகவும் துல்லியமாக குறிகுணங்களை விபரித்து எழுதியிருந்தார். பல புதிய விடயங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. டொக்டர்.ஈ.சி.கிறிஸ்டஸ்சனுக்கு பாராட்டுக்கள்.

**தி.சுமதி, சவுத்தோல்**


குறிப்பு: சென்ற மாத வடலியில் வெளிவந்த மூட்டு வீக்கம் பற்றிய கட்டுரை தொடர்பாக 9 போர் வரவேற்று கருத்து தெரிவித்துள்ளனர். பலர் என்னென்ன தலைப்புகளில் எதிர்காலக் கட்டுரைகள் அமையவேண்டும் என்றும் எழுதியிருந்தனர். சிலர் கட்டுரைக்கான தலைப்புகளின் பட்டியலையே அனுப்பியிருந்தனர். அனைவருக்கும் நன்றி. வாசகர் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படும்.



USHANI
Caterers
Excellent Quality Food Products for Supermarket Chains in the UK & Europe





Specialist in North/South Indian, Sri Lankan, Chinese & Thai Cuisine
Noon House
34-38 Steele Road, Park Royal, London NW10 7AS
Tel: 020 8838 4757 Mob: 07867 911 591
0800 195 99 75
www.ushanicaterers.com





Free Surprise Dish for Every Catering Orders

எமது உணவு வகைகள் அனைத்தும் அதியுயர் சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்படுகிறது

நீங்கள் விரும்பும் உணவு வகைகளுடன் அரங்கேற்றம், கல்யாணம் போன்ற வைபவங்களுக்கு தேவையான அழைப்பிதழ், மண்டப அலங்காரம், வீடியோ, போட்டோ, போன்ற ஏனைய தேவைகளும் உங்கள் மனமகிழ்வுக்கு ஏற்ப செய்துதரப்படுகிறது.



அம்பாள் ஜுவல்லர்ஸ்



✪ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்
✪ கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்
✪ நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்

Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
Tel: 020 8672 9955
Fax: 020 8672 7097



Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள்
Lewisham

பிரித்தானிய குடியுரிமை பெற Life in the UK என்னும் பரீட்சையில் சித்தி அடைந்து இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான வகுப்புகள் லூசியத்தில் (Lewisham) இரு இடங்களில் நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு. விரும்பினால் உங்களுக்கு தேவையான பகுதியை மாத்திரம் படித்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: பிரபா Tel: 07749 051 394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயமலை

பனியின் ஆலயம் என்ற அர்த்தத்தில் வடமொழியில் கிம் ஆலய என்ற பெயரில் இம்மலை அழைக்கப்பட்டது. இதன் திரிபுதான் இமயமலை. கிழக்கு மேற்காய் 1600 மைல்களும் வடக்குத் தெற்காய் சராசரி 200 மைல்களுக்கு மேல் அகலமும் கொண்ட ஒரு பாரிய மலைத்தொடர்தான் இந்த இமயமலை. இங்கு உள்ள எட்டுச் சிகரங்கள் 25 அயிரம் அடிக்கு கூடிய உலகின் அதி



உயர்ந்த சிகரங்கள். முதல் இடத்தை வகிக்கும் எவரஸ்ற் மலையின் உயரம் 29028 அடி.

புவியியலாளர் கணக்குப்படி 50 கோடி ஆண்டுகட்கும் 30 கோடி ஆண்டுகட்கும் இடைப்பட்ட காலத்தில் தெற்கிகிலிருந்து படிப்படியாக வடக்கு நோக்கி நகர்ந்த இந்திய உபகண்ட பூமித்தட்டு ஆசிய ஐரோப்பிய தட்டுடன் மோதி ஒன்றை ஒன்று அழுத்தியதன் விளைவே இந்த மலைத்தொடர். இதற்கு ஆதாரமாக இமயமலை செல்பவர்கள் இங்கு பல இடங்களிலும் கடற்கரைகளில் காணப்படும் கற்களை காணலாம். ஏன் மலையின் நடுவே ஓடும் இந்து நதியின் இரு மருங்கிலும் இக்கற்களை போதியளவு கண்டு களிக்கலாம். இங்குள்ள மக்களும் இக் கற்கள் கடற்கரையிற் காணப்படும் கற்கள் என்கிறார்கள். விசாரித்ததில் அவர்கள் எவருமே கடலைக் கண்ணால் பார்த்தறியாதவர்கள்.

இம்மலைத்தொடரின் மேற்குப்பக்கம் பூ மத்திய ரேகையிலிருந்து வடக்காக 2500 மைல் தொலைவில் உள்ளது. ஆனால் கிழக்குப் பக்கம் தெற்கு நோக்கி கீழே இறங்கி உள்ளது.

இதன் பாரிய உருவமும் உயரமும் காரணமாக மத்திய ஆசியாவில் நிலவும் கால நிலைக்கும் வட இந்தியாவின் கால நிலைக்கும் இடையில் குறிப்பிடக் கூடிய வேறுபாட்டை உருவாக்குகிறது. இங்கு இட்ராஸ் என்று ஒரு மக்கள் வாழும் இடம் உண்டு. அது உலகில் மக்கள் வாழும் பகுதிகளில் குளிர் கூடிய பகுதிகளில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இங்கு வாழும் மக்கள் பனி உறைவு காரணமாக ஆண்டில் அரைவாசிக் காலம் மற்றைய இடங்களுடன் எவ்வித போக்குவரத்துத் தொடர்பும் அற்ற நிலையிலேயே வாழவேண்டி உள்ளது. அண்மைக் காலங்களாக ஒரு ஆறுதல் விமான சேவை இங்குள்ள முக்கிய நகரமான "லே" இல் இருந்து புது டெல்லி வரை உள்ளது.

- சி.மாசிலாமணி

# உணவும் உடற் பருமனும்

உடற் பருமனுக்கும் நாம் உட்கொள்ளும் உணவுவகைக்கும் நிச்சயம் சம்பந்தம் உண்டு ஆனாலும் எம் நாவுக்கு சுவையாகப் பழக்கப்பட்ட சில உணவுவகைகளைக்



கைவிடுவது கடினம். இக்காரணத்தால் உணவை மாற்றுவதற்கு பதிலாக பழக்கப்பட்ட உணவுகளின் தன்மையை மாற்றுவது பற்றி ஆராயப்படுகிறது. உதாரணமாக உணவின் கொழுப்பு விகிதாசாரத்தை குறைத்தல், அல்லது செரிக்க கூடுதல் நேரம் எடுக்கும் தன்மைக்கு மாற்றி உட்கொள்ளும் அளவைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றைக் கூறலாம்.

இதே சமயத்தில் இறைச்சி முதலியவற்றிலிருந்து கொழுப்பின் அடர்த்தியை கூடியளவு குறைப்பதால் அவ்வுணவுகள் பழுதடைந்து விஷப் பொருட்களை வெளியிடும் தன்மைக்கு மாறும் சாத்தியம் அதிகரிக்கும் என்ற எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

காளான் இந்த புதிய மாற்றங்களில் முக்கிய பங்கை வகிக்கப் போகிறது. ஆனால் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் ஒரு எல்லைக்கு மிஞ்சி போகமாட்டா. ஆகையால் ஒட்டுமொத்தமாக இந்த ஆய்வுகள் உடற் பருமனைக் கட்டுப்படுத்தும் ஒரு அங்கமாக அமையுமே அன்றி முழுமையான தீர்வாக அமையாது.

# மதகுருமாருக்கு பாதுகாப்பு தேவை

மதகுருமாரின் பாதுகாப்பை கவனத்திற்கு எடுத்து அவர்கள் தனிமையாக இயங்கும் போது அவர்கள் அணியும் குருப் பட்டியை கழட்டி வைத்திருக்க ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஐந்து மதகுருமார் கொல்லப் பட்டிருக்கிறார்கள். 2001ல் நடந்த கணக்கு எடுப்பு ஒன்று 12 வீதமான மதகுருமார் வன்செயலுக்கு உள்ளாகி உள்ளதைக் காட்டுகிறது.

## பொப்பி.... (1ம் பக்க தொடர்ச்சி)

முதலாம், இரண்டாம் உலகப்போரிலும் அதன் பின் நடைபெற்ற சண்டைகளிலும் இந்நாட்டிற்காக போராடி வீழ்ந்தவர்கள் இந்நாளில் நினைவுகூரப்படுகிறார்கள்
1918-ம் ஆண்டு கார்த்திகை கார்த்திகை மாதம் 11ம் திகதி 11மணிக்கு முதலாம் உலகப்போர் முடிவுக்கு நாளையே நினைவு நாளாக அன்று முதல் இன்று வரை நினைவுகூரப்பட்டு வருகிறது.
தமிழீழமக்கள் எவ்வாறு கார்த்திகை 27-ம் திகதியை மாவீரர் நாளாக நினைவு கொள்கிறார்களோ அதேபோல் பிரித்தானிய மக்களுக்கு கார்த்தியை 11ம் திகதி முக்கியம் பெறுகின்றது. தமிழிழத்தில் கார்த்திகை மலர்போல, பிரித்தானியாவில் பெப்பி எனப்படும் மேலுள்ள சிவப்பு நிறமான பூ தான் இந் நாளின் நினைவுமலராக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நாட்களில் கடைகளிலும் சந்தைகளிலும் கடதாசியினால்ல் செய்யப்பட்ட பெ்பபி மலர் விற்பனை செய்வார்கள். மக்கள் மக்கள் மடிந்தவர்களை மனதில் என்ணி இப்பூவை வாங்கி அணிவார்கள். நாம் அனைவரும் இப் பூவை வாங்கி அணியவேண்டும். இந்நாடு வளமுள்ளதாய் இருப்பதற்கு போராடியவர் களின் தியாகம் முக்கிய காரணம் என்பதை நாம் மறக்கக்கூடாது.

## பெற்றோர்களின்.... (1ம் பக்க தொடர்ச்சி)

வாங்கி விடுவார்கள். இதில் சில குழந்தைகள் மாதத்தில் பாதிநாட்கள் தாயிடமும், மீதி நாட்கள் தந்தையிடமும் இருக்கலாம் என்று தீர்ப்பாகும். இந்த மாதிரியான சூழலில் பெற்றோர் இருவரிடமும் குழந்தை மாறி மாறி அல்லல்படும். நம்மை ஏன் இப்படி அங்கும் இங்குமாய் இழுத்தடிக்கிறார்கள் என்று கூட புரியாமல் அந்த பாசப் பூந்தளிர்கள் தடுமாறும்.

தங்களுக்கும் பிரிவு ஏற்பட்டாலும் குழந்தைகளை மனதளவில் பிரிய முடியாத அப்பாவோ அம்மாவோ சில சமயங்களில் தங்கள் செல்வாக்கில் குழந்தைகளை அதிரடியாய் கடத்தி விடுவதும் உண்டு. சிலர் தாயகத்திற்கு கடத்திச் செல்வதும் உண்டு. கணவன் இப்படி கடத்திக் கொண்டு வந்து விட்டால் மனைவி மறுபடியும் போலீஸ், நீதிமன்றம் என்று அலைகிற அவஸ்தையும் சேர்ந்து கொள்ளும்.
இரண்டு கண்ணில் எது பிடிக்கும் என்ற கேட்கிற மாதிரி சில பெற்றோர் பிரிந்து போன நிலையில் கொஞ்சம் விவரம் புரிகிற நிலைக்கு வந்து விட்ட தங்கள் பிள்ளைகளிடம், "உனக்கு யாரோடு இருக்கப் பிடிக்கும்? அப்பாவிடமா? அம்மாவிடமா" என்று கேட்பதுண்டு. இதில் பதில் சொல்லத் தடுமாறுகிற குழந்தைகள் விவரம் தெரிகிற வயதுக்கும் வந்து விட்டார்கள் என்று அர்த்தம். விவரம் தெரிய ஆரம்பித்ததுமே பிள்ளை களுக்கு ஏற்படுகிற இந்த தர்ம சோதனைகள் அவர்களை அவர்களின் இயல்பில் இருந்து வேறுபடுத்திவிடும். அவர்களுக்கும் இருக்கும் இயல்பான திறமைகள் இதன் மூலம் அடிபட்டுப் போகவும் வாய்ப்புக்கள் அதிகம்.

பாடசாலையில் சேரும்வயதில் இந்தக் குழந்தைகள் தங்களுக்கு ஏற்பட்டு இருக்கும் முழுமையான பாதிப்பை உணரத் தொடங்கி விடுகின்றனர். மற்ற குழந்தைகளின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அழைத்து வந்திருக்க, இவர்களின் பெற்றோரிலோ ஒருவர் மட்டும் வந்திருப்பார்கள். அப்போதே குழந்தைகளிடம் அவர்களையும் அறியாமல் ஒருவித ஏக்கம் தலைதூக்கத் தொடங்கி விடும். கவலையை சுமக்கக்கூடிய வயதல்லவே அது. இந்தக் கவலை படிப்பில் அவர்களுக்கான ஆர்வத்தை குறைத்து விடும்.
இதனால் பாடசாலையில் பக்கத்து சீட்டில் இருக்கும் குழந்தைகளிடம் பல நேரங்களில முரட்டுத்தனமாகவும் நடந்து கொள்வார்கள். இதனால் மன வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் ஆற்றல் குறையத் தொடங்கி விடும்.

இதுமாதிரி பெற்றோரின் விவாகரத்தில் பாதிக்கப்படும் குழந்தைகள் ஐந்து வயது வரையிலாவது தாயிடம் வளர்வதே சரியாக இருக்கும் என்கிறார்கள் மனவியல் நிபுணர்கள். தந்தையிடம் தான் வளர்ந்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ள சில பெண் குழந்தைகள் கூட தங்களின் 12-13 வயதில் அவர்களின் உடலிலும் மனதிலுமாக ஏற்படக்கூடிய கார்மோன் மாற்றங்களை தந்தையிடம் சொல்ல முடியாமல் அந்த நேரத்தில் தாயின் அருகாமையை விரும்புவார்கள். இந்த மாதிரியான கட்டங்களில் அப்பா குடிகாரராக இருக்கும் பட்சத்தில் அந்தப் பெண்கள் ஒருவித பாதுகாப்பற்ற தன்மையை உணர்ந்து மனதுக்குள்ளோ குமைந்து போவதும் நடக்கும். கடுமையான இந்த மன சோதனை யில் அந்தப்பெண்கள் படும்பாட்டை வார்த்தைகளில் விவரித்து விட முடியாது.
இதையெல்லாம்தாண்டி அந்தத் தந்தையும் மகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மகளை தாயிடம் அனுப்பி வைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தாயார் இரு கரம்நீட்டி அணைத்துக்கொண்டு மகளுக்கு பக்கபலமாகத் தானே இருக்க வேண்டும். சில தாயார்கள் இநத மாதிரி நேரத்தில் கூட "இப்போது தான் நாங்களெல்லாம் உன் கண்ணுக்குத் தெரிந்தோமாக்கும்?" என்று வார்த்தைகளால் குத்திக் குதறி விடுவதும் நடக்கிறது. தம்பதிகளுக்களான பிரச்சினையில் அந்தப் பிள்ளைகள் மனதளவில் படும்பாடு சொல்லி முடியாது.
இதில் கூட இன்னொரு கொடுமையாக இந்தப் பிள்ளைகள் உணரும் விடயம், தங்கள் அப்பா அல்லது அம்மாவின் இன்னொரு திருமணம். அம்மா இப்படி திருமணம் செய்து கொம்ளுள் வீடுகளில் அவளது பெண்ணுக்கு அந்த புதிய அப்பாவால் கூட சில நேரம் பாதுகாப்பு இல்லாத நிலை நேரிட்டு விடுகிறது. அப்பாவிடம் இருக்கும் பிள்ளைகளுக்கு அப்பாவின் புது மனைவி பிரச்சினை தருபவளாக அமைந்து விடுகிறாள். அனுதின வாழ்க்கையும் இப்படி நரகமாகி விடும் போது தான் இது மாதிரியான குழந்தைகள் பல நேரங்களில் வீட்டை விட்டு ஓடிப்போவது உம்பட பல விபரீதங்களும் நடந்து விடுகிறது.

சில வீடுகளில் கணவனும் மனைவியும் எலியும் பூனையுமாக இருப்பார்கள். ஆனால் ஒரே வீட்டில் தான் இருந்து கொண்டிருப்பார்கள். இது மாதிரியான வீடுகளிலும் அவர்கள் பிள்ளைகள் பாதிக்கப்பட்டடே இருப்பார்கள். இந்தப் பிள்ளைகளுக்கு அவர்கள் படிக்கும் பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்கள் அமைந்து விட்டால் பாடசாலை வாழ்க்கை மட்டும் ஒரளவுக்கு அவர்களைப் பக்குவப் படுத்தி வைத்திருக்கும்.
பிள்ளைகள் வளரும்பருவத்தில் அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக பெற்றோர் இருந்து விட்டால் பிள்ளைகள் நிச்சயம் ஏதாவது ஒரு துறையில் தங்களை ஒளிமிக்கவர்களாய் வெளிப்படுத்தவே செய்வார்கள்.


EASTERN CLINIC
Natural Medicine Centre


தேவையற்ற உடற் பருமனைக்குறைக்க...
புதிய விஞ்ஞான பூர்வமான சிகிச்சை

- உடனடியான பருமன் குறைவு
- எடை குறைவு அதிகரிப்பு
- கொழுப்பையும் தேவையற்ற ஊளைச்சதையை குறைக்க
- இடை, தொடை மெலிவடைய

இயற்கை மருத்துவ நிலையம்
ஈஸ்டன் கிளினிக்
Dr.என்.எஸ் மூர்த்தி
இயற்கை மூலிகை மருத்துவம்
சீன அக்குபங்சர் சிகிச்சை

- கோமியோபதி
- மன உளைச்சல்
- தோல் வியாதிகள்
- தலை முடி
- முதுகு வலி
- உதிர்தல்
- மூட்டு வாதம்
- உடற் பருமன்
- தலைவலி


சிகிச்சைக்கு முன்


சிகிச்சைக்கு பின்

ஆண் பெண் இருபாலாருக்கும் பெண் மருத்துவர் அளிக்கும் சிகிச்சை
1079 Garratt Lane
Tooting. London SW17 0LN
Tel: 020 8682 3876


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தன்மை

"அந்த மனிதனுடைய பெருந்தன்மையைப் பாருங்கள். இப்படியல்லவா வாழவேண்டும். மனிதரில் மாணிக்கங்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்" என்று ஊரார் பேசிக்கொள்ளும்போது அதனைக் கேட்பவரின் மனதில் எப்படிப்பட்ட உணர்வுகள் எழுகின்றன?என்னையே நான் சோதித்துப் பார்த்தால் அந்த உண்மை புலப்படும்.
பெருந்தன்மை என்பது ஒரு மனிதனுடைய பரந்த மனப்பான்மையைக் குறிக்கும். அதாவது நல்ல உள்ளம், இரக்கம், அன்பு, மன்னிக்கும்மனப்பான்மை, நீதியோடு நடக்கும் பண்பு இவைகளைக் குறிக்கும்.

நீதியோடு நடத்தல் என்பது அவரவருக்கு உரியதை அவரவருக்கு கொடுப்பதாகும். பெருந்தன்மையான மக்கள் பசியோடும், ஏழ்மையோடும் துன்பப்பட்டு வாழும்போது நான் மட்டும் சகல சுகபோகங்களையும் அனுபவித்து, அவர்கள் மனதைப் புண்படுத்துவது நீதியல்ல. நல்ல உள்ளம் என்பது மற்றவருக்குத் தீங்கு செய்யாமலும், பழிச்சொல் சொல்லாமலும், நாணங்கெட்ட பேச்சுப் பேசாமலும் மற்றவருக்குத் தன்னை தியாகம் செய்யும் உள்ளமாகும். அன்பு என்பது உணர்வல்ல, தீர்மானம். அல்லது அர்ப்பணமாகும். மற்றவர் எனக்கு நல்ல பிரதிச்செயலைக்காட்டும்போத நான் அவரில் அன்பு கொள்வதும், மற்றவர் எனக்கு விருப்பமில்லாத விதத்தில் நடக்கும்பொழுது அன்பு கொள்ளாதிருப்பதும் அன்பல்ல. எப்படிப்பட்ட பிரதிச் செயலைச் செய்தாலும், மற்றவரது பலவீனத்தில் அவரை ஏற்றுக்கொள்வதாக எடுக்கும் தீர்மானம், அர்ப்பணமே அன்பாகும். இரங்கும் உள்ளம் என்பது மற்றவர் துன்பப்படும்போது அவருக்கு இரக்கம் காட்டுவது, உள்ளவர்கள் இல்லாதவர்களிடம் இரக்கம் காட்டுவது. மற்றவர் தனக்கு துன்பம் தரும்போத அவர்களைப் பழிவாங்காத, அவர்களுடைய குற்றத்தை ஏற்றுக்கொண்டு அதை அன்போடு அவர்களுக்கு எடுத்துரைத்து மன்னிப்பது, மன்னிக்கும் மனப்பண்மை என்பர்.

பெருந்தன்மையுடைய மனிதர்கள் எப்போதும் நல்லதையே பேசுவார்கள். மற்றவர்களுடைய தவறுகளைப் பெரிதுபடுத்தி அவதூறு பேசாது நல்லவற்றைப் பேசுவார்கள். அதேபோன்று விருந்தோன்பும் பண்பும் அவர்களிடம் இருக்கும். அதுமட்டுமல்ல மற்றவர்களை மதிக்கும் பண்பும் உண்டு. கற்றவரானாலும் கல்லாதவரானாலும் ஏழைகளானாலும் பணக்காரரானாலும் மற்றவரை மதித்துப் பேசுவர். மேலும் பெருந்தன்மையுடையவர்கள் எனக்குத் தான் எல்லாம் தெரியும். நான்தான் உயர்நதவன் என்று எண்ணாமல் மற்றவரது கருத்துக்கும் மதிப்புக்கொடுத்து வாழ்வர். எமக்குள் பெருந்தன்மை இல்லாதபோது மற்றவரை மதிக்காது மற்றவர்களை அடிமைப்படுத்தி சுயநலத்தோடு வாழ முயற்படுகின்றோம்.

பெருந்தன்மை என்பது எமது வாழ்வில் இருக்கவேண்டிய பெருஞ் சொத்தாகும். இதனால் எமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை ஏற்படும். பெருந்தன்மையை எல்லோரும் பெற வேண்டும். அதன்படி எல்லோரும் வாழ வேண்டும். அப்போது சமுதாயமே மகிழ்வுறும்.



கண்ணத் திறந்து .. அங்க பார் என்ன அடி அடிக்கிறாங்கள்.......

# இளைய கானக்குயில் நிகழ்ச்சி 2007

திருமதி யோகா தில்லைநாதன் அவர்கள் நடத்திவரும் கானக்குயில் பாடல் போட்டி நிகழ்ச்சி சென்ற மாதம் 20ம் திகதி கிறீன்பேர்ட் அசெனம்பிளி மண்டபத்தில் நடைபெற்றது. 2007ஆம் ஆண்டின் பால கானக்குயில், இளைய கானக்குயில் தெரிவுளுக்காக போட்டி நடைபெற்றது. இளைய கானக்குயில் தெரிவில் ஆண் குயிலாக ஆனந் பிறேமக்குமார் அவர்களும், பெண் குயிலாக புண்ணியா செல்வமுருகானந்தன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பால கானக்குயில் தெரிவில் ஆண் குயிலாக கபிலன் செல்வமுருகானந்தன அவர்களும் பெண் குயிலாக அஜித்தா பாலகிருஷ்ணன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.






## பிரசித்தகாரன்.... (3ம் பக்க தொடர்ச்சி)

வளைத்துப் பொருத்திக் கட்டினார்கள். முன்பக்கமும் பின் பக்கமும் சற்றே நீண்டு இருக்கக் கூடியமாதிரி தடிகள் வளைத்துக் கட்டப்பட்டன. அதன் பிறகு மெல்லிய கமுகம் சலாகைகளை குறுக்குப் பட்டியல் வைத்துக் கட்டினார்கள். கூடு சரியாக அமைத்து விட்டது. அதன்மேல் நல்ல பனை ஓலைப் பாய்களை இரண்டு பட்டாகப் போட்டு மூடி, அவற்றின் ஓரங்களைக் கூடாரத்தின் அளவாக வெட்டினார்கள். அதன்மேல் "தார்ச்சாக்கு" ப் போட்டு மூடி, ஓரங்களைத் தடிகளுடன் சுருட்டித் தைத்து விட்டார்கள். இந்தத் தார்ச் சாக்குகள் எந்த மழையையும் தாங்கும். இப்படிக் கட்டப்பெற்ற கூடாரம் பல ஆண்டுகளுக்குப் பழுதுபடாமல் நின்று பிடிக்கும்.
மிகச் சுருக்கமாகச் சில வரிகளில் இந்தக் கூடாரம் கட்டுவது பற்றி எழுதிவிட்டேன். ஆனால் கூடாரத்தைக் கட்டி முடிக்க இரண்டு நாட்கள் சென்றதாக நினைப்பு. ஒவ்வொரு வளையத்தையும் மிக அவதானமாக அளவு தவறாமல் தொழில் நுட்பத்தோடு செய்தார்கள். பயிற்சி இல்லாதவர்கள் இப்படியான வேலைகளைச் செய்ய இயலாது.
அந்தக் காலத்தில் இப்படிப் பல தேர்ச்சி பெற்ற கைவினைஞர்கள் இருந்தார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.
கோயில் சப்பரத்துக்குப் படல் கட்டும் சிலர் பச்சைத் தென்னோலையிலேயே, இடையிடையே மஞ்சள் குருத்தோலைகளை இணைத்து அவற்றில் அழகிய சித்தர வேலைகளைச் செய்வார்கள்.

எங்களூரில் "நாராணிச் சட்டம்பியார்" என்று ஒரு வயோதிபர் இருந்தார். நான் சிறுவனாக இருந்தபோதே அவர் காலமாகிவிட்டார். அவர் பல நுட்பமான கைவேலைகள் செய்வாரென்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இளைஞர்களுக்கு "எட்டு மூலைப் பட்டம்" "கொக்குப் பட்டம்" முதலிய பட்டங்களை மிக அழகாகச் செய்து அவைகளுக்கு "விண்" ணும் கட்டிக் கொடுப்பாராம் நாராணிச் சட்டம்பியார்.

**Perma**
*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

- ✪ உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
- ✪ வாகனங்கள்
- ✪ வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- ✪ இயந்திர உபகரணங்கள்

- ❖ இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
- ❖ ஏற்றுமதி
- ❖ இறக்குமதி
- ❖ களஞ்சியப்படுத்துதல்
- ❖ ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த **Car Park**
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

Web: www.permainternational.co.uk
E-mail: info@ permainternational.co.uk

*COLLECTION POINTS*
* Milton Keynes
* North London
* East London

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்

